7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவுகள், ஆய்வு செய்தல். 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 44/1995), மாண்புமிகு நிதி அமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1995) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 44/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 29/1995), மாண்புமிகு சட்ட அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 29/1995)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@3-11-1995 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1995 நவம்பர் 10]

பிற்பகல் *12–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட்டை மேலும் திருத்துவதற்காக ஒரு திருத்தத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதிலே ஏற்கெனவே தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் ஒயின் ஷாப், பீர் ஷாப், எரிசாராயம், சாராயம் போன்றவைகள் எல்லாம் விற்பதற்கான லைசன்ஸை ஏற்கெனவே சட்டப்படி வேறு ஒரு இடத்திலேயிருந்து-தாசில்தார், எச்சைஸ் துறையினரிடமிருந்து வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துவருகிறது. இப்போது அதை போலீஸ் கமிஷனரிடமிருந்து வாங்கவேண்டும் என்கின்ற ஒரு திருத்தத்தை நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே லைசன்ஸ் பெறுவதற்கான விதிமுறைகள் இருக்கிறபோது இப்படி ஒரு நிலைமையை, பொதுவாக காவல்துறையினரிடம் இந்த லைசன்சைக் கொடுக்கக் கூடிய அதிகாரத்தை-ஏற்கெனவே ஒரு இடத்தில் இருக்கிறபோது இதையும் பகிர்ந்து கமிஷனர் லைசன்ஸ் கொடுக்கவேண்டுமென்று ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவது என்பது காவலர்களுக்கு இன்னும் அதிக அதிகாரத்தைக் கொடுத்துவிட்டது போல் ஆகிவிடும். ஆக ஏற்கெனவே இருக்கக் கூடிய நிலை என்ன என்பதை அமைச்சரவர்கள் இங்கே விளக்கவேண்டும். ஆக இதுபோன்று ஏற்கெனவே விதிமுறைகள் இருக்கிறபோது இது தேவையா என்பதை நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இளம்வழுதி.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களையும், சில சந்தேகங்களையும் கேட்க ஆசைப்படுகிறேன். அதாவது ஏற்கெனவே உள்ள சட்டத்திலே உணவு இல்லங்கள், 'ஈட்டிங் ஹவுசஸ்', உணவகங்கள், ஒயின் கடைகள், பீர் கடைகள், ஃபென்சிங் ஸ்கூல் ஹவுசஸ், போர்டிங் ஹவுசஸ், ஜிம்னாசியம், ஹோட்டல், இதற்கெல்லாம் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளரிடம் அனுமதி பெற்று நடத்த வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விவரங்களைப் பார்க்கின்றபோது இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள சில விவரங்கள் விடப்பட்டிருக்கின்றன..

ஆனால் இதிலே ஹோட்டல் இருக்கிறது, ஃபென்சிங் ஸ்கூல் இருக்கிறது, போர்டிங் ஹவுஸ் இருக்கிறது, காபி ஹவுஸ் இருக்கிறது, ஜிம்னாசியம் இருக்கிறது. எல்லாம் இருக்கிறது. ஆனால் அந்த ஒயின் ஷாப், அராக் ஷாப் இதெல்லாம் இல்லை. ஆனால் இதன்பிரகாரம் பார்க்கும்போது மாநகரக் காவல்துறை ஆணையாளரிடம் இனிமேல் அனுமதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் இந்தச் சட்டத் திருத்தத்திலேயிருந்து நான் புரிந்துகொண்டுள்ள வரை இதுதான் என்று கருதுகிறேன். அப்படியானால் இப்போது இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான அவசியம் என்ன என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே கடந்த மாதம் மதுக் கடை உரிமையாளர்கள் எல்லாம் கடைகளை மூடினார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவிற்கு உட்பட்டுத்தான் நீங்கள் பேச வேண்டுமே தவிர, மற்றவையெல்லாம் இங்கே பேச வேண்டாம். (குறுக்கீடு) அது இதிலே வராது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. (குறுக்கீடு) நீங்கள் ஸ்கோப் ஆப் தி பில்லிற்கு உட்படாமல் வெளியே போய் பேசினால் எப்படி சரியாகும்?

திரு. இளம்வழுதி: இந்த உரிமையாளர்கள் கடைகளை மூடினார்கள். அதன் எதிரொலியாக இந்தச் சட்டம் கொண்டுவருவதாக நான் கருதுகிறேன். அதே நேரத்திலே ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இளம்வழுதி, தேவையில்லாத விஷயங்களுக்கு எல்லாம் நீங்கள் போய்க்கொண்டிருக்கிறீர்கள். அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் ஒரே ஒரு சிறு அம்சம், இரண்டு சட்டங்களில் இன்றைக்கு மதுக்கடைகளை அனுமதிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டம். இரண்டாவது நம்முடைய தமிழ்நாடு புரொஹிபிஷன் ஆக்ட். அதிலும் இருக்கிறது. எனவே போலீசிடமிருந்து எடுத்து—போலீசிற்கு அதிகாரங்கள் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இனி தமிழ்நாடு புரொஹிபிஷன் ஆக்ட்டை நிறைவேற்றுகின்ற மதுவிலக்குத் துறையினரிடத்திலே இந்த அதிகாரத்தைக் கொடுப்பதற்காகத்தான் இது 'சூப்பர்ஃபுலுவசாக' இருக்கிறது. இந்தச் சட்டத்திலே இருக்கின்ற மிகுதியை எடுத்துவிட்டு, போலீசிற்கு அதிகாரமே கிடையாது. இனி மதுவிலக்கு அதிகாரிகளுககுத் தான் இருக்கவேண்டுமென்று இந்த ஒரு சிறு திருத்தம். சூப்பர்ஃபுளுவசாக எடுத்ததுதான் என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, அவ்வளவு தான், உட்காருங்கள். திரு. பரிதி, அமைச்சர் அதற்குப் பதில் சொல்லி விட்டார். சட்டமுன்வடிவை வாக்கெடுப்பிற்கு விடப் போகிறேன் உட்காருங்கள்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தனது திருத்தத்தை மொழியலாம்.

பிரிவு-1

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 1, in sub-clause (1), *for* the expression "(Amendment)", *substitute* the expression "(Second Amendment)".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், திருத்தம் நிறைவேறியது.

பிரிவு 1 திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.